# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (19.06.2024 முதல் 23.06.2024)

**அறிக்கை எண் 049/2024** **தேதி.18.06.2024**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 21°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது.

### ஈரோடு மாவட்டத்தின் கடந்த வார வானிலை

ஈரோடு மாவட்டத்தின் 14.06.24 முதல் 17.06.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 24°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 84 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 57 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 19-24 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (14.06.2024 முதல் 17.06.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 23.06.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/06 | 15/06 | 16/06 | 17/06 | தேதி | நாள்-1 19/06 | நாள்-2 20/06 | நாள்-3 21/06 | நாள்-4 22/06 | நாள்-5 23/06 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.6 | மழை (மி.மீ) | 3 | 2 | 0 | 2 | 14 |
| 33 | 33 | 34 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 37 | 36 | 37 | 37 | 36 |
| 24 | 24 | 24 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 26 | 25 | 25 | 24 | 25 |
| 7 | 5 | 4 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 4 | 7 | 8 |
| 84 | 81 | 72 | 70 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 60 | 70 | 80 |
| 74 | 57 | 58 | 59 | குறைந்தபட்சகாற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 50 | 70 |
| 19 | 24 | 24 | 23 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 14 | 12 | 14 | 10 | 10 |
| 200 | 230 | 230 | 230 | காற்று வீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 230 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (19.06.2024 முதல் 23.06.2024)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 19.06.24, 20.06.24, 22.06.24 மற்றும் 23.06.24 ஆகிய நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 24°செ முதல் 26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10-14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **19-06-2024** | 1.0 | 1.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 1.0 | 0.0 | 1.0 |
| **20-06-2024** | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 1.0 | 0.0 | 1.0 |
| **21-06-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **22-06-2024** | 1.0 | 1.0 | 0.0 | 4.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 2.0 | 3.0 | 2.0 |
| **23-06-2024** | 12.0 | 13.0 | 12.0 | 20.0 | 14.0 | 11.0 | 16.0 | 11.0 | 11.0 | 18.0 | 13.0 | 19.0 | 27.0 | 18.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வரும் 5 நாட்களில் மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகமானது மணிக்கு 10 - 22 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனத்தினை தொடரவும். மருந்து தெளிப்பினை காலை நேரங்களிலோ (அ) 3-4 மணிநேரம் மழையில்லாத வானிலை எதிர்பார்க்கப்படும்போது மட்டும் மேற்கொள்ளலாம்..<br>நிலவும் வானிலையினைப் பயன்படுத்தி ஒத்திவைக்கப்பட்ட நீர்பாசனம், விதைப்பு, உரமிடல் மற்றும் மருந்து தெளிப்பினை தொடரலாம். |
| நெல் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் வானிலை நெல் நாற்றங்காலில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் நிலவ ஏதுவாக உள்ளது. இதனை கண்காணித்து தேவைப்பட்டால் 5 சத வேப்பங்கொட்டைசாற்று கரைசலைத் தெளிக்கவும். |
| கரும்பு | வளர்பருவம் | உள்ளுர் பகுதிகளில் அதிவேகக் காற்று மற்றும் லேசான மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும். |
| தக்காளி | நடவு | மானாவாரியில் தக்காளி நடவு செய்ய இது உகந்த பருவம் ஆதலால் தக்க ஆயத்த பணிகளை மேற்கொள்ளவும். |
| வாழை | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் மணிக்கு 12 -24 கிமீ வரை வேக காற்றினை கருத்தில் கொண்டு 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| தென்னை | | தென்மேற்கு பருவமழை துவங்கி இருப்பதால் மரம் நடவு செய்ய விரும்பும் விவசாயிகள் தக்க ஆயத்த பணிகளை மேற்கொள்ளவும். மேலும் தென்னைக்கு உரமிட மரத்தைச்சுற்றி 1.8 மீட்டர் தள்ளி அரைவட்ட வடிவில் குழி எடுக்கவும். |
| கால்நடைகள் | | கடந்த மழையில் முளைத்த புதிய புற்களை மேயவிடுவதை தவிர்ப்பதனால் கால்நடைகளில் குடற்புழுக்களின் தாக்கத்தினை தவிர்க்கலாம்.<br>வேகமான காற்றினால் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சினைப்போக்க கால்நடைகளுக்கு போதிய குளிர்ந்த நீர் அளிக்கவும். |

**குறுஞ்செய்தி**

- எதிர்பார்க்கப்படும் அதிவேக காற்றினால் 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்தல் மற்றும் கரும்பில் விட்டம் கட்டுதல் மூலம் சாய்வதனை தடுக்கலாம்.